ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ செப்டம்பர். 01, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 329 ❖ ரூ.10

ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா- "தெற்கிலிருந்து வரும் குரலுக்காக காத்திருங்கள்"

# ஆடியோ சீரிஸ்

## "சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கருத்தியல் ஆகியவை உள்ளதே இணையற்ற இந்தியா; முதல்வர் மு.க.ஸ்டாலின்




சென்னை, செப். 01-

ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா என்ற தலைப்பில் ஆடியோ சீரிஸ் வெளியிடப்போவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக திமுக தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கருத்தியல் ஆகியவை உள்ளதே இணையற்ற இந்தியா.

ஒரே மதம், ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே பண்பாடு, ஒரே தேர்வு, ஒரே தேர்தல் உள்ளிட்டவையெல்லாம், பலவகைப்பட்ட மக்கள் வாழும் இந்தியாவை உருக்குலைக்கும் நச்சுக் கருத்துகள்.

குமரி முதல் இமயம் வரையிலான பரந்து விரிந்த இந்திய நாட்டைக் காப்பாற்றும் கடமை நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது என்ற நோக்கோடு, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியின் அலங்கோலங்களை அம்பலப்படுத்தியும், பன்முகத்தன்மை கொண்ட, வலுவான மாநிலங்கள் கொண்ட, மதச்சார்பற்ற இந்தியாவைக் காப்பாற்றுவது குறித்தும், கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், *Podcast* (குரல்பதிவுத் தொடர்) வடிவில், *Speaking for India* என்ற தலைப்பில் பேச இருக்கிறார். இத்தொடர் ஆங்கிலத்திலும், இந்தியாவின் பல்வேறு மாநில மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டும் வெளியாகவுள்ளது"என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் பேசிய ஆடியோ ஒன்றும் அந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. அதில் முதல்வர் ஸ்டாலின், "செக்.. 1,2,3.. ஆரம்பிக்கலாமா? கடந்த சில மாதமாக உங்களில் ஒருவன் என்ற தலைப்பில் கேள்வி பதில் வடிவத்தில் பல விஷயங்களை உங்களிடம் பகிர்ந்து கொண்டு வருகிறேன்.

திமுகவின் 75-வது ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் பழம்பெரும் கட்சி. இந்திய நாடாளுமன்றத்தின் மூன்றாவது பெரிய கட்சி. அண்ணா, கலைஞர் என்று இந்திய நிலப்பரப்பில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய தலைவர்களால் உருவாக்கப்பட்ட உடன் பிறப்புகள் நாங்கள்.

இப்பொழுது இந்தியாவுக்காக பேச வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம். 2024ஆம் முடியப் போற பாஜக ஆட்சி இந்தியாவை எப்படி எல்லாம் உருக்குலைத்திருக்கிறது; எதிர்காலத்தில் நாம் கட்டமைக்கவிரும்புகின்ற சமத்துவ சகோதரத்துவ இந்தியா எப்படி இருக்கும் என்று ஒரு ஆடியோ சீரியஸில் பேசப் போகிறேன்.

அதற்கு 'ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா' என்ற தலைப்பு வச்சுக்கலாமா? தெற்கிலிருந்து வரும் இந்தக் குரலுக்காகக் காத்திருங்கள்" என்று பேசியிருக்கிறார்.

# காவிரி மேலாண்மை வாரிய முடிவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனு தாக்கல்

புதுடெல்லி , செப். 01-

ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 12 வரையில், விநாடிக்கு 7,200 கனஅடி வீதம் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தோம். ஆனால், அதைக் கருத்தில் கொள்ளாமல், 5,000 கனஅடி தண்ணீரை திறந்துவிட, காவிரி மேலாண்மை வாரியம் தன்னிச்சையாக உத்தரவு பிறப்பித்துள்ளது' என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.



காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தங்களால் தற்போது தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில், ஒரு இடையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தது. இந்த இடையீட்டு மனுவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசு சார்பில்பதில்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பதில் மனுவில், "மழை அளவு குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கருத்தில்கொண்டுதான், தமிழகம் சார்பில், எங்களுக்கு தேவையான நியாயமான அளவு தண்ணீரை திறந்துவிடக் கோரியிருந்தோம். ஆனால், காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு எங்களது கோரிக்கையை கருத்தில் கொள்ளவில்லை.

8.988 டிஎம்சி அளவுக்கு தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால், அதை செய்வதற்கு காவிரி மேலாண்மை ஆணையம் தவறிவிட்டது. ஆணையத்துக்கு, தமிழகத்துக்கான தண்ணீர் பற்றாக்குறை இருப்பது தெரியும். ஆனால், அது தெரிந்தும் கர்நாடக அரசு உரிய தண்ணீரை திறந்துவிட உத்தரவு பிறப்பிக்க காவிரி மேலாண்மை ஆணையம் மறுப்பு தெரிவித்துவிட்டது.

ஆரம்பத்தில் 15,000 கன அடி தண்ணீர் திறந்துவிடக் கோரியிருந்தோம். பிறகு, மழையளவு குறைவு உள்ளிட்ட காரணங்களால்தான், தண்ணீர் திறப்பு அளவை நாங்களே குறைத்து கேட்டிருந்தோம். அதாவது, 29.08.2023 முதல் 12.09.2023 வரையில், ஒரு விநாடிக்கு 7200 கனஅடி வீதம் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தோம். ஆனால், அதை கருத்தில் கொள்ளாமல், 5,000 கனஅடி தண்ணீரை திறந்துவிட, காவிரி மேலாண்மை வாரியம் தன்னிச்சையாக உத்தரவு பிறப்பித்துள்ளது. இது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிரானது.

இந்த விவகாரத்தில், கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ள முடியாத தகவல்களை உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. குறிப்பாக, தமிழக அரசின் மனுவை அவசர வழக்காக விசாரிக்கக்கூடாது என்று அவர்கள் கூறியிருப்பது, எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழக அரசு காவிரி நீரை முறையாக பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் ஏற்புடையது அல்ல. மேலும், இந்ததருணத்துக்கு தேவைப்படாத விசயங்களை எல்லாம் கர்நாடக அரசு வேண்டுமென்றேமனுவில் கொண்டு வந்துள்ளது. எனவே இந்த இடையீட்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சான்விடுதி ஊராட்சி, பாப்பன்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 2 வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக்கட்டடத்தின் கட்டுமானப் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# சுங்கச்சாவடி கட்டணத்தை உயர்த்தி ஏழை, எளிய மக்களை மத்திய அரசு சுரண்டுகிறது வேல்முருகன் விமர்சனம்



சென்னை , செப். 01-

சுங்கச்சாவடி கட்டணத்தை உயர்த்தி ஏழை, எளிய மக்களை மத்திய அரசு சுரண்டுகிறது என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி தி.வேல்முருகன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் 63 சுங்கச்சாவடிகள் உள்ளன. இந்த சுங்கச் சாவடிகளில் ஆண்டுக்கு ஒரு முறை 5 விழுக்காட்டில் இருந்து 10 விழுக்காடு வரை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய ஒப்பந்தபடி, 1992ம் ஆண்டு போடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் மாதமும், 2008ம் ஆண்டு போடப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் மாதமும் கட்டணம் உயர்த்தப்படுகிறது. அதன்படி, தமிழ்நாட்டில் இரண்டு கட்டங்களாக சுங்கக் கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. அதில் ஏப்ரல் மாதம் 29 சுங்கச்சாவடிகளுக்கும் செப்டம்பர் மாதம் மீதமுள்ள 26 சுங்கச் சாவடிகளுக்கும் ஆண்டுதோறும் கட்டணம் உயர்த்திக்கொள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதித்துள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 26 சுங்கச்சாவடிகளில் சுங்கக்கட்டணம் இன்று நள்ளிரவு முதல் உயர்த்தப்பட இருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது. தென் மாநிலங்களில் உள்ள 5 சுங்கச்சாவடிகளில் நடந்த கட்டண வசூலில் ரூ.132 கோடி முறைகேட்டை சிஏஜி அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. இதில், தமிழ்நாட்டில் இருக்கும் பரனூர் சுங்கச்சாவடியும் ஒன்று. இந்த ஒரே ஒரு சுங்கச்சாவடியில் மட்டும் 6.5கோடி ரூபாய் முறைகேடாக வசூலித்திருக்கிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் 26 சுங்கச் சாவடிகளில் சுங்கக் கட்டண உயர்வு இன்று நள்ளிரவு முதல் உயர்த்தப்பட இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, கேரளா ஆகிய தென்மாநிலங்களில் சுங்கக் கட்டண வசூல், சிஏஜி ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 2017-18 நிதியாண்டு முதல் 2020-21 நிதியாண்டு வரை ரூ.28,523.88 கோடி வசூல் ஆகியுள்ளது. நாடு முழுவதுமான வரி வசூலில் இது சுமார் 28 விழுக்காடாகும். இதில், தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுக்கு ரூ.2,400 கோடி வசூலாகியுள்ளது என சிஏஜி அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் அதிகமாக 63 சுங்கச்சாவடிகள் உள்ளன. இதில் காலாவதியான 32 சுங்கச்சாவடிகளை மூட வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி உள்ளிட்டு அரசியல் கட்சிகளும், ஜனநாயக இயக்கங்களும்தொடர்ந்து போராடி வருகின்றன. மேலும், காலாவதியான சுங்கச்சாவடிகளையும், மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சுங்கச்சாவடிகளையும், நகர்ப்புறத்தில் இருக்கும் சுங்கச்சாவடிகளையும், 60 கி.மீ குறைவாக இருக்கும் சுங்கச்சாவடிகளையும், நகர்ப்புறத்தில் இருக்கும் சுங்கச்சாவடிகளையும் அகற்ற வேண்டுமென சட்டமன்றத்தில் நான் வலியுறுத்தி பேசியிருந்தேன். பிற சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியிருந்தனர்.


அதன் அடிப்படையில், காலாவதியான சுங்கச்சாவடிகளை அகற்றுவதற்கு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ வேலு, கடிதம் வாயிலாகவும் நேரடியாகவும், ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தியிருந்தார். ஆனால், அக்கோரிக்கையின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத ஒன்றிய அரசு, சுங்கச்சாவடி உரிமையாளர்களோடு கைகோர்த்துக்கொண்டு கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டு வருவது கடும் கண்டத்திற்குரியது.

எனவே, ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள சுங்க கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் காலவதியாகியுள்ள 32 சுங்கச் சாவடிகளையும், 60 கி.மீ. தூரத்திற்கு குறைவாக இருக்கும் சுங்க சாவடிகளையும், நகர்புறத்தில் இயங்கும் சுங்கச் சாவடிகளையும், மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சுங்குச்சாவடிகளையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

இவ்விவகாரத்தில் தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு, சுங்கச்சாவடி கட்டண உயர்வை தடுத்து நிறுத்த வேண்டும். மேலும், காலாவதியான சுங்கச்சாவடிகளை அகற்ற, ஒன்றிய அரசுக்கு போதிய அழுத்தம் தர வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது'' என்று வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# டிஎன்பிஎஸ்சி தலைவர் பதவிக்கு சைலேந்திர பாபு ஆளுநர் ரவியிடம் உரிய விளக்கத்துடன் அரசு மீண்டும் பரிந்துரை





சென்னை , செப். 01-

டிஎன்பிஎஸ்சி தலைவராக சைலேந்திர பாபுவை நியமிக்க மீண்டும் பரிந்துரைத்தும், அதுகுறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தமிழக அரசு மீண்டும் கோப்புகளை அனுப்பியுள்ளது.

தமிழக அரசுத் துறைகளில் உயர் அதிகாரிகள், ஊழியர்கள் என அனைத்து நிலைகளிலும் உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் பணியில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், டிஎன்பிஎஸ்சி சார்பில் ஆண்டுதோறும் தேர்வுகால அட்டவணை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் தேர்வுகள், நேர்காணல்கள் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, முதல்வர் ஸ்டாலின் தனது சுதந்திர தின உரையில், தமிழக அரசு துறைகளுக்கு புதிதாக 55 ஆயிரம் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பும் டிஎன்பிஎஸ்சி மூலமாகத்தான் செயல்படுத்தப்பட உள்ளது. ஆனால், கடந்த பல மாதங்களாக டிஎன்பிஎஸ்சியில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிகள் காலியாக உள்ளன. இதனால், தேர்வுகள் நடத்தப்பட்டாலும் நேர்காணல் உள்ளிட்டவற்றை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில், தமிழக தலைமை டிஜிபியாக இருந்த சைலேந்திர பாபு கடந்த ஜூன் 30-ம் தேதி ஓய்வு பெற்றார். இவரை டிஎன்பிஎஸ்சி தலைவராக நியமிக்க தமிழக அரசு முடிவெடுத்தது. இதைத் தொடர்ந்து, டிஎன்பிஎஸ்சி தலைவராக சைலேந்திர பாபுவையும், உறுப்பினர்களாக 8 பேரையும் புதிதாக நியமித்து, ஆளுநரின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

ஆனால், டிஎன்பிஎஸ்சி தலைவர் பதவிக்கு சைலேந்திர பாபு மற்றும் உறுப்பினர்கள் நியமனம் தொடர்பாக தமிழக அரசு அனுப்பிய பரிந்துரையை, அரசுக்கே ஆளுநர் திருப்பி அனுப்பியிருந்தார். இப்பதவிகளுக்கான விண்ணப்பம் குறித்து வெளியிடப்பட்ட விளம்பரம், பெறப்பட்ட விண்ணப்பங்கள், தலைவர், உறுப்பினர் பதவிகளுக்கு பரிந்துரைக்கப் பட்டவர்களின் விவரங்கள், பரிந்துரை பட்டியலை இறுதி செய்தது எப்படி? நியமனம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்பது உட்பட பல்வேறு விவரங்களை ஆளுநர் கோரியதாககூறப்பட்டது.

இந்த விவகாரத்தில் ஆளுநர் கேட்ட விளக்கங்களை கோப்பாக தயாரித்து தமிழக அரசு மீண்டும் திரும்ப அனுப்பியுள்ளது. அதில், இந்தப் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் யார்? எதன் அடிப்படையில் சைலேந்திர பாபு தேர்வு செய்யப்பட்டார் என்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. டிஎன்பிஎஸ்சி தலைவர் மற்றும் உறுப்பினர் விண்ணப்பங்கள் தொடர்பாக செய்திதாள்களில் விளம்பரங்கள் எதுவும் செய்ய வேண்டியது இல்லை எனவும் அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், டிஎன்பிஎஸ்சி தலைவராக சைலேந்திர பாபுவை நியமிக்க வேண்டும் என்று தமிழக அரசு மீண்டும் பரிந்துரைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## ரசாயனம் கலக்காத விநாயகர் சிலைகளை மட்டுமே விற்க, கரைக்க வேண்டும் உயர் நீதிமன்றம் உத்தரவு



மதுரை , செப். 01–

மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பசுமை தீர்ப்பாயத்தின் விதிமுறைகளை பின்பற்றி ரசாயன கலப்படம் இல்லாத விநாயகர் சிலைகளை மட்டுமே விற்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை சேர்ந்த அரசுபாண்டி, உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: ''விநாயகர் சதுர்த்தியை இந்துக்கள் பெரியளவில் கொண்டாடுகின்றனர். விநாயகர் சதுர்த்திக்காக பிளாஸ்டர் ஆப் பாரிஸ் உள்ளிட்ட பல்வேறு ரசாயன பொருட்களை பயன்படுத்தி விநாயகர் சிலைகள் செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுகிறது. பின்னர் விநாயகர் சிலைகள் நீர் நிலைகளில் கரைக்கப்படுகிறது.

ரசாயனபொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும்விநாயகர் சிலைகள் தண்ணீரில் எளிதில் கரைவதில்லை. இந்த சிலைகளால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இந்தாண்டு விநாயகர் சதுர்த்தியின் போது ரசாயனம் கலந்த விநாயகர் சிலைகளை கடல், ஆறு மற்றும் நீர் நிலைகளில் கரைக்க தடை விதிக்க வேண்டும்'' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. பின்னர் தலைமை நீதிபதி அமர்வு, 'மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பசுமை தீர்ப்பாயம் வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றியே விநாயகர் சிலைகளை செய்ய வேண்டும். இந்த விதிமுறைகளை பின்பற்றி ரசாயன கலப்படம் இல்லாத விநாயகர் சிலைகளை மட்டுமே செய்து விற்க வேண்டும், நீர் நிலைகளில் கரைக்க வேண்டும். இதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். மனு முடித்து வைக்கப்படுகிறது' என உத்தரவிட்டது.

## வெல்டிங் வைக்கும்போது டேங்கர் வெடித்து வெளிமாநில தொழிலாளி உயிரிழப்பு படுகாயமடைந்தவருக்கு தீவிர சிகிச்சை



கோவை, செப். 01–

மலுமிச்சம்பட்டி அருகேயுள்ள போடிபாளையத்தில் சண்முகம் என்பவருக்கு சொந்தமான வெல்டிங் ஒர்க் ஷாப் உள்ளது. இங்கு தொழிலாளர்களாக உத்தரபிரதேசமாநிலத்தைச் சேர்ந்த வக்கீஸ்(38), ரவி உள்ளிட்ட 5-க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வந்தனர்.

சுந்தராபுரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு சொந்தமான டேங்கர் லாரி வெல்டிங் வைப்பதற்காக நேற்று முன்தினம் இங்கு கொண்டு வரப்பட்டது. நேற்று முன்தினம் காலை தொழிலாளர்கள் வக்கீஸ், ரவி உள்ளிட்டோர் லாரியில் இருந்த டேங்கர் மூடியைதிறக்கும் பணியில் ஈடுபட்டனர். 2 மூடிகளை திறந்த அவர்கள், 3-வது மூடியை வெல்டிங் வைத்து திறக்க முயன்றனர். அப்போது திடீரென பயங்கர சத்தத்துடன் லாரியின்டேங்கர்வெடித்து தீப்பிடித்தது.

இதில் சிக்கி படுகாயமடைந்த வக்கீஸ் சிறிது நேரத்தில் உயிரிழந்தார். ரவி படுகாயமடைந்தார். சத்தம் கேட்டுவந்தசகஊழியர்கள் ரவியை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

கிணத்துக்கடவு தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து டேங்கரில் பிடித்த தீயை அணைத்தனர். மதுக்கரை போலீஸார் வக்கீஸின் சடலத்தை கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீஸார் கூறும்போது, "இந்தடேங்கர் லாரி முன்பு பர்னஸ் ஆயில் ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது லாரியை வாங்கியவர், தண்ணீர் ஏற்றிச் செல்லும் பயன்பாட்டுக்காக அதை மாற்ற திட்டமிட்டுள்ளார். அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அப்போது டேங்கரின் மீது ஏறிய வக்கீஸ், மூடியை வெல்டிங் வைத்து திறக்க முயன்றுள்ளார். உள்ளே ஒட்டியிருந்த ஆயில், எரிவாயுவாக மாறி வெளியேற வழியில்லாமல் இருந்துள்ளது. அச்சமயத்தில் தீப்பொறி பட்டவுடன் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து பிரிவில் வழக்குப் பதிந்து விசாரணை நடக்கிறது'' என்றனர்.




### செப்.18 முதல் 22 வரை

## நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் மத்திய அரசு திடீர் அறிவிப்பு



புதுடெல்லி , செப். 01–

செப்டம்பர் 18 முதல் 22 வரை நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெறும்என்றுமத்திய அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் சமீபத்தில் நிறைவடைந்தது. மணிப்பூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக இந்தக் கூட்டத் தொடரின் பெரும்பாலான அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு, நாடாளுமன்றம் முடங்கியது. இந்நிலையில், திடீர் அறிவிப்பாக நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடர் செப்டம்பர் 18 முதல் 22 வரை 5 நாட்கள் நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ள மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, "நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடர் செப்டம்பர் 18 முதல் 22 வரை கூட்டப்படுகிறது. அமிர்த காலத்தை முன்னிட்டு, நாடாளுமன்றத்தில் பயனுள்ள விவாதங்கள் நடத்த எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியில் செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் ஜி20 உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு முடிந்த பிறகு இந்தக் கூட்டத் தொடருக்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில், இந்தக் கூட்டத் தொடர் கூட்டப்படுவதன் நோக்கம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## குளத்தில் மூழ்கி 3 சகோதரிகள் உயிரிழப்பு தந்தை கண்முன்னே பலியான பரிதாபம்



**திருவனந்தபுரம், செப்.01–**

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு பீமநாடு பகுதியை சேர்ந்தவர் ரஷீத். இவரது மனைவி அஸமா. இவர்களுக்கு நிஷிதா (வயது26), ரமீஷா(23), ரின்ஷி(18) என்ற மகள்களும், ஒரு மகனும் உள்ளனர்.

இவர்களில் நிஷிதா, ரமீஷாஆகியஇருவருக்கும் திருமணமாகி கணவரின் வீட்டில் வசித்து வருகின்றனர். இந்நிலையில் ஓணம் பண்டிகைக்காகஅவர்கள் இருவரும் பெற்றோரின் வீட்டுக்கு வந்திருந்தனர். அவர்களதுசகோதரருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு சிறுநீரக மாற்று அறுவை கிசிச்சை நடந்துள்ளது. அவருக்கு அவர்களது தாய் அஸமா தான் சிறுநீரகம் தானம் கொடுத்துள்ளார்.

இதனால் சகோதரிகளின் தாய் மற்றும் சகோதரர் ஆகிய இருவரும் வீட்டில் ஓய்வில் இருந்து வந்தனர். இந்நிலையில் சகோதரிகள் 3 பேரும், அவர்களது தந்தையுடன் பீமநாடு பகுதியில் உள்ள குளத்திற்கு குளிக்க சென்றனர். அப்போது சகோதரிகளில் ஒருவர் குளத்தில் தவறி விழுந்து தத்தளித்தார். இதனை பார்த்த மற்ற சகோதரிகள் அவரை காப்பாற்ற அடுத்தடுத்து குளத்துக்குள் இறங்கினர். அவர்களும் குளத்துக்குள் தவறி விழுந்து தத்தளித்தார்கள்.

சகோதரிகள் 3 பேரும் அடுத்தடுத்து குளத்தில் மூழ்கினர். இதனை கரையில் இருந்த அவர்களது தந்தை பார்த்து கூச்சலிட்டார். அவரது சத்தம் கேட்டு அந்த பகுதியில் இருந்து தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டனர். அவர்கள் குளத்தில் மூழ்கிய 3 சகோதரிகளையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். சுயநினைவின்றி கிடந்த அவர்கள், அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனால்ஆஸ்பத்திரிக்கு செல்வதற்குள் 3 பேரும் பரிதாபமாக இறந்து விட்டனர். தந்தை கண் முன்னே 3 சகோதரிகளும் குளத்தில் மூழ்கி பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## மனைவியின் நடத்தையில் சந்தேகம் 10 வயது மகனை வெட்டி கொன்ற தந்தை



திருப்பதி , செப். 01–

ஆந்திர மாநிலம் ஒய் எஸ் ஆர் மாவட்டம் அஸ்தலிங்கய்ய பள்ளியை சேர்ந்தவர் சிவசங்கர். இவரது மனைவி சுஜாதா. தம்பதிக்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள் இளைய மகன் சோமேஸ்வர ரெட்டி (வயது 10). இவர் அங்குள்ள பள்ளியில் 5-ம் வகுப்பு படித்து வந்தார். மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சிவசங்கர் அவரிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தார். நேற்று இரவும் கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டது.

மனைவியின் நடத்தையில் சந்தேகத்தால் 2-வது மகனை கொலை செய்ய முடிவு செய்தார். இந்நிலையில் நேற்று அதிகாலை சிறுவன் சோமேஸ்வர ரெட்டி வீட்டில் ஒரு அறையில் படுத்து தூங்கிக்கொண்டு இருந்தார். அப்போது சிவசங்கர் வீட்டில் இருந்த கத்தியை எடுத்து வந்து தூங்கிக் கொண்டு இருந்த மகனை சரமாரியாக வெட்டினார். இதனால் சோமேஸ்வர ரெட்டி வலி தாங்க முடியாமல் அலறி துடித்தார். மகனின் அலறல் சத்தம் கேட்ட தாய் சுஜாதா மற்றும் அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தனர். சோமேஸ்வர ரெட்டி ரத்த வெள்ளத்தில் துடித்துடித்து தாய் கண் முன்னே பரிதாபமாக இறந்தான்.

அதற்குள் சிவசங்கர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். மகன் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதை பார்த்ததாய்சுஜாதா கதறி துடித்தார். இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவம் இடத்திற்கு வந்து சோமேஸ்வர ரெட்டியின் பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அங்குள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து சிவசங்கரை தேடி வருகின்றனர்.



மேட்டுப்பாளையம் நகர மன்ற சாதாரண கூட்டம் நகர் மன்ற தலைவர் மெஹறிபா பர்வீன் அஷ்ரப் அலி தலைமையில் நடைபெற்றது. நகராட்சி கமிஷனர் அமுதா முன்னிலை வகித்தார். நகர மன்ற துணைத்தலைவர் அருள் வடிவு முனுசாமி, நகராட்சி பொறியாளர் சுகந்தி மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## காவிரியில் தண்ணீர் திறந்து விட எதிர்ப்பு கர்நாடக விவசாயிகள் இரவு முழுவதும் போராட்டம்



கர்நாடகா , செப். 01–

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகாவிற்கும் இடையில் காவிரியில் தண்ணீர் திறந்து விடும் விவகாரத்தில மோதல் இருந்து வருகிறது. காவிரியில் தமிழகத்திற்குரிய நீரை கர்நாடக அரசு திறந்து விடவில்லை என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. அப்போது கார்நாடக அரசு சார்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிடையே திங்கள்கிழமை காவிரி மேலாண்மை வாரியம் கூடியது. அப்போது கர்நாடக அரசு வினாடிக்கு 5000 கனஅடி நீர் வீதம், 15 நாளைக்கு திறந்து விட வேண்டும் எனத் உத்தரவிட்டிருந்தது. இதற்கு கர்நாடக மாநிலம் மாண்டியாவில் உள்ள விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். காங்கிரஸ் ஆதரவு பெற்ற சுயேட்சை எம்.எல்.ஏ. தர்ஷன் புட்டனையாக இந்த போராட்டத்திற்கு ஆதரவாக உள்ளார்.

விவசாயி போராட்டத்தில் ஈடுபட்டு இரவு முழுவதும் போராட்டத்தை தொடர்ந்தனர். மெழுகுவர்த்தி ஏந்தி வைத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தை தொடர்ந்து, காவிரி நீர் தொடர்பாக ஆலோசனை நடத்த துணை முதல்வர் டி.கே. சிவகுமார் இன்று டெல்லி செல்ல இருக்கிறார். இதற்கிடையே தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட்டால், அணைகளின் நீர் இருப்புகள் குறைந்து, குடிநீர் பற்றாக்குறை ஏற்படும். இதனால் தண்ணீர் திறந்து விட வாய்ப்பு இல்லை என கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்திருந்தார். நேற்று காவிரில் நீர் வரத்து அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 4200 கனஅடியாக இருந்து நீர்வரத்து 6300 அடியாக அதிகரித்திருந்தது.

## செந்தில்பாலாஜி ஜாமீன் மனு தலைமை நீதிபதியிடம் முறையிட உயர் நீதிமன்றம் அறிவுறுத்தல்



சென்னை , செப். 01–

சட்டவிரோதப் பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில்உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கோரிய மனுவை விசாரிப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது.

சட்டவிரோதப் பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின்கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஜூன் மாதம் 14-ம் தேதி கைது செய்தனர். அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வழங்கக் கோரி, எம்.பி., எம்எல்ஏ-க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்புநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த மனுவை விசாரணைக்குஏற்கமறுத்த சிறப்பு நீதிமன்றம், இந்த வழக்கு சட்டவிரோதப் பணப் பரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்டது என்பதால், இது தொடர்பாக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தை நாடுமாறு உத்தரவிட்டது.

அதன்படி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு புதன்கிழமை பட்டியலிடப்படாததால், செந்தில் பாலாஜி தரப்பில் வழக்கறிஞர்கள் அருண், பரணிக்குமார் ஆகியோர் முதன்மை அமர்வு நீதிபதி எஸ். அல்லி முன்னிலையில் முறையிட்டனர். அதற்கு நீதிபதி, "இதுதொடர்பாக சிறப்பு நீதிமன்றமே விசாரிக்கும்" என்றார்.

அதையடுத்து, சிறப்பு நீதிமன்றத்தில் திமுக வழக்கறிஞர்கள் முறையிட்டனர். அதற்கு சிறப்பு நீதிமன்ற நீதிபதி ரவி, "அமலாக்கத் துறை தரப்பில் தொடரப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்படும் ஜாமீன் மனுவை விசாரிக்கசிறப்பு நீதிமன்றத்துக்குஅதிகாரம் உள்ளதா என்பதை உயர் நீதிமன்றத்தில் தெளிவுப்படுத்திவரும்படி செந்தில்பாலாஜிதரப்புக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எம்.சுந்தர், ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ ஆஜராகி முறையீடு செய்தார். அப்போது, ஏற்கெனவே, இந்த விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணையில் நீதிபதியாக இருந்த நீதிபதி ஆர்.சக்திவேல் விலகியிருந்த நிலையில், இந்த முறையீட்டை எப்படி ஏற்றுக்கொள்வது? என்று நீதிபதி எம்.சுந்தர் கேள்வி எழுப்பினார்.

அப்போது மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, இதற்கு மாற்றாக ஒரு அமர்வு உண்டு. ஆனால், அந்த அமர்வு இன்று விடுமுறை என்பதால்தான், தங்களிடம் முறையிடுவதாக தெரிவித்தார். மேலும், ஒரு நிர்வாக ரீதியான உத்தரவை பிறப்பித்தால் கூட போதும் என்று தெரிவித்தார்.

அப்போது நீதிபதி சுந்தர், ஜாமீன் கோரி தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுவைப்பொறுத்தவரை, யார் விசாரிப்பது என்பது குறித்து தலைமை நீதிபதிதான் முடிவு செய்வார். எனவே, வழக்கு தொடர்பாக தலைமை நீதிபதி அமர்வில்முறையீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

செந்தில் பாலாஜியை ஆஜர்படுத்தக் கோரி அவரது மனைவி மேகலா தொடர்ந்தஆட்கொணர்வு வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதி ஆர். சக்திவேல் ஏற்கெனவே விலகியிருந்தார். மேலும், சென்னை உயர் நீதிமன்ற தலைமைநீதிபதிதற்போது உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் அமர்ந்து வழக்குகளை விசாரித்து வருகிறார். எனவே, நீதிபதி சுந்தர் மற்றும் சக்திவேல் அமர்வுக்கு மாற்று அமர்வாக இருக்கும் நீதிபதி சுரேஷ்குமார் தலைமையிலான அமர்வு நேற்று விடுமுறை என்பதால், இன்று அந்த அமர்வில் முறையிட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

### காலை உணவு திட்டம் நல்ல திட்டம்

# குழந்தைகளுக்கு உணவு கொடுக்கின்ற திட்டம் சிறப்பானது புதுவை துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் வரவேற்பு



சென்னை, செப், 1

சென்னை திருவொற்றியூரில் தியாகராஜ ஸ்வாமி உடனுறை வடிவுடையம்மன் கோவிலில் தெலுங்கானா மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் சுவாமி தரிசனம் செய்தார்

வடிவுடையம்மன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்த பின்பு வெளியில்வந்தஅவருக்கு பாஜக மாவட்ட பொதுச்செயலாளர் ஜெய்கணேஷ் மண்டல் தலைவர் ஜெகதீஷ் மாவட்ட தமிழ் வளர்ச்சி பிரிவு செயலாளர் பாஸ்கர் மண்டல் பொதுச் செயலாளர் பாபு கருணா முத்து ஸ்ரீதர் ஆகியோர் பாஜக தொண்டர்கள் நிர்வாகிகள் கையில் ராக்கி கட்டி சகோதரவத்துடன் ரக்ஷா பந்தன் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்துபேசிய தமிழிசை சௌந்தரராஜன் பாரத பிரதமர் 200 ரூபாய் கேஸ் மானியம் குறைத்துள்ளார்கள் கேஸ் விலை குறைக்கப்பட்டுள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சியாக உள்ளது.

புதுவையில் மகளிர்க்கு வீட்டு தலைவிகளுக்கு செலவில் 500 ரூபாய் குறைவதாக உள்ளது. ஏற்கனவே மாநில அரசு முதலமைச்சர் அறிவிப்பின்படி எனது ஒப்பதலோடு 300 ரூபாய் கொடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.

300 மற்றும் 200 சேர்ந்து 500 ரூபாய் குடும்பத் தலைவிகளுக்கு குறைந்த விலையில் கேஸ் கிடைக்கும் ஆனால் தமிழகத்தில் கேஸ் மானியம் மாநில அரசு கொடுக்கும் என்று கூறினார்கள்.

இதுவரை கொடுக்கவில்லை உடனே தமிழக மக்களுக்கு கேஸ் மானியம் கொடுக்க வேண்டும் தமிழகத்தை சார்ந்த வகையில் மகளிர் சார்பில் எனது கோரிக்கையை வைக்கின்றேன். தமிழகத்தில் காலை உணவு திட்டம் நல்ல திட்டம் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கின்ற திட்டம் சிறப்பானது புதுவை துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் வரவேற்பு என் தெரிவித்தார்.

# ஊராட்சி மன்ற தலைவரின் கார் கண்ணாடியை உடைத்து சேதம்: போலீசார் விசாரணை



தரங்கம்பாடி, செப். 01:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஒன்றியம் எடுத்துக்கட்டி சாத்தனூர் ஊராட்சி மன்ற தலைவராக இருப்பவர் திமுகவை சேர்ந்த பைலட் இவர் தனது வீட்டு வாசல் முன்பு நிறுத்தி இருந்த பொலிரோ கார் கண்ணாடிகள் மர்ம நபர்களால் அடித்து உடைத்து சேதப்படுத்தப் பட்டுள்ளது கார் முன்புறமுள்ள கண்ணாடி மற்றும் பின்புறம் உள்ள கண்ணாடிகள் அடித்து உடைத்து சேதப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் காரில் இருந்த சில பொருள்களும் திருடப்பட்டுள்ளதாக ஊராட்சி மன்ற தலைவர் பைலட் பொறையார் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

மேலும் தொடர்ந்து தனக்கு அச்சுறுத்தல் இருந்து வருவதாகவும் ஊராட்சி மன்ற தலைவர் பைலட் புகார் அளித்துள்ளார் ஆளுங்கட்சி திமுக ஊராட்சி மன்ற தலைவர் கார் கண்ணாடிகள் அடித்து உடைத்து சேதப்படுத்தப்பட்டு இருப்பதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது இது குறித்து பொறையார் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# எனது பில், எனது அதிகாரம்" காரைக்காலில் கலெக்டர் தலைமையில் விழிப்புணர்வு நடை பயணம்



காரைக்கால், செப்,1

எனது பில், எனது அதிகாரம்" காரைக்காலில் விழிப்புணர்வு நடை பயணம் ஜி.எஸ்.டி வரி செலுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய அரசு, மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் "எனது பில், எனது அதிகாரம்" என்ற ஒரு திட்டத்தை அறிவித்து உள்ளது. இந்த திட்டம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முன்னோடியாக தொடங்கப்பட உள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், சி.ஜி. எஸ்.டி ஆணையரகம் மூலமாக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் புதுச்சேரி யூனியன் பிரதேச முதலமைச்சர் என். ரங்கசாமி இன்று தொடங்கிவைக்கப்பட உள்ளது. இந்நிலையில், நேற்று காரைக்கால் யூனியன் பிரதேசத்தில் விழிப்புணர்வுக்காக ஒரு பேரணியை மாவட்ட ஆட்சியர் மத்திய ஜி.எஸ்.டி ஆணையர், கூடுதல் ஆணையர், துணை ஆணையர் மற்றும் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இருந்து பிரச்சார பயணத்தை நடத்தினர்.

முன்னதாக மாவட்ட ஆட்சியாளர் ஏ. குலோத்துங்கன், மற்றும் ஜி.எஸ்.டி ஆணையர் என்.பத்மஸ்ரீ, ஐ.ஆர்.எஸ். சொற்பொழிவாற்றினர். பிறகு மேற்கொள்ளப்பட்ட இந்த நடை பயணத்தில் பிரசாந்த் குமார் காகர்லா, கூடுதல் ஆணையர், டி. தினேஷ் துணை ஆணையர், புதுச்சேரி மற்றும் காரைக்காலை சேர்ந்த மத்திய ஜி.எஸ்.டி அதிகாரிகளும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும், கலந்து கொண்டனர்.

பதிவிட வேண்டும். இதற்கு மாற்றாக இந்த திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் 200 ரூபாய் மதிப்புக்கு மேல் உள்ள பில்களை "எனது பில், எனது அதிகாரம்" என்ற மொபைல் செயலியில் வலைத்தளத்திலும் பதிவேற்றம் செய்யலாம். பரிசுகளை வென்றவர்களுடைய விவரங்கள் ஒவ்வொரு மாதமும் மற்றும் ஒவ்வொரு காலாண்டும், குலுக்கல் முறையில் அறிவிக்க படும். பரிசு தொகை 10,000 ரூபாய் முதல் 1 கோடி வரை அறிவிக்கப்பட்டு உள்ளது. பரிசு தொகை வெற்றிப்பட்டவரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

# அன்னவாசல் வட்டார வளமையத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம்



அன்னவாசல்

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் வட்டார வளமையத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் குறித்த தன்னார்வலர்களுக்கான பயிற்சி வட்டார வளமையத்தில் நடைபெற்றது. வட்டார கல்வி அலுவலர் அலெக்சாண்டர் துவக்கி வைத்தார். 75 தன்னார்வளர் கலந்து கொண்ட இப்பயிற்சியில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி பேசுகையில்:-

எழுத்தறிவுமூலம்புதிய பாரதத்தை படைக்கும் இத்திட்டம் எண்ணையும் எழுத்தையும் எல்லோரும் கற்றுக்கொண்டு இந்த நவீன உலகை பிறர் உதவியின்றி தானே வெற்றியாக சமாளிக்க உதவும் மிகச் சிறந்த திட்டமாகும். இரண்டு எழுத்தில் பெயர் உள்ளவர்கள் கூட தன்னுடைய பெயரை வாசிக்க முடியாமலும் எழுத முடியாமலும் இருப்பது கல்வியின் பின்னடைவாகும். எனவே தன்னார்வலர்கள் ஆகிய நீங்கள் எழுத்தறிவிக்கும் இப்பணி மிகுந்த மனநிறைவு தரும் பணியாகும். வாழ்வில் ஏமாறாமல் இருக்க வங்கிகளுக்கு சென்று பணம் எடுக்கும் முறை, வெளியூர் செல்லும் போது எந்த ஊர் பேருந்து என்பதை எல்லாம் சரியாக படித்து தெரிந்து கொள்ள முதியோர்களுக்கும் கல்வி அவசியமாகும்.

எனவே மனநிறைவோடு இப்பணியை தொடருங்கள் என்று பேசினார். இக்கல்வி முறையானது ஒரு நாளைக்கு இரண்டு மணி நேர வீதம் மொத்தம் 200 மணி நேரம் செப்டம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை 6 மாதங்கள் பாடம் எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இப்பயிற்சியினை ஆசிரியர் பயிற்றுநர்கள் மனோகரன் மற்றும் செந்தில்குமார் பாடப் புத்தகம் கொண்டு விளக்கி பயிற்சியளித்தார்கள். தன்னார்வலர்களுக்கு பயிற்சி ஏடுகள் வழங்கப்பட்டது.

# உளுந்தூர்பேட்டையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம்



கள்ளக்குறிச்சி, செப், 01_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறை இணைந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம் உளுந்தூர்பேட்டை வட்டார வளமைய வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இம்முகாமினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா துவக்கி வைத்தார், இம்முகாமில் 18 வயதிற்கு உட்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், இவர்களுக்கு தேசிய மாற்றுத்திறனாளி அடையாள அட்டை மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இம்முகாமில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சுப்பிரமணியன், மாவட்ட கல்வி அலுவலர் ஆரோக்கியசாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமதாசு, வட்டார கல்வி அலுவலர் முத்துசாமி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் அருள்செல்வன், ஆசிரியர் பயிற்றுநர்கள் சக்திவேல், காசிலிங்கம், சுரேஷ், அரசு, ரம்யா, சரிதா, சிறப்பு பயிற்றுநர்கள் ஜானகிராமன், கோமதி, ராஜலட்சுமி, சரண்யா, புஷ்பா, இயன்முறை மருத்துவர் ராதா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கூட்டம்



காரைக்கால், செப்1-


சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கூட்டம், காரைக்கால் ஹோட்டல் ஏ.வி.எஸ். இம்பீரியாவில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு, ஜி.எஸ். டி ஆணையர் திருமதி என். பத்மஶ்ரீ, ஐ.ஆர்.எஸ் தலைமை தாங்கினார்கள்.

கூடுதல் ஆணையர் பிரசாந்த் குமார் காகர்லா, துணை ஆணையர் டி. தினேஷ் மற்றும் அலுவலர்கள், பட்டய கணக்காளர் . பி. கணபதி சுப்பிரமணியம் காரைக்கால் சேம்பேர் ஆப் காமெர்ஸ் தலைவர் அறிவழகன் மற்றும் காரைக்காலை சேர்ந்த சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ஜி.எஸ்.டி நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்ட சமீபத்தைய மாற்றங்கள் விளக்கப்பட்டன. மேலும், ஜி.எஸ்.டி வரி செலுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய அரசு அறிவித்து உள்ள "எனது பில், எனது அதிகாரம்" என்ற ஒரு திட்டம், விளக்க படம் வாயிலாக எடுத்து உரைக்கப்பட்டது.

கூட்டத்தில் தொழில் முனைவோரின் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மேலும், நவம்பர் 2022-ஆம் ஆண்டு நடந்த தொழில் முனைவோர்கள் கூட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சேவா போஜ் மற்றும் பதிவு ரத்து, பதிவு இடை நீக்கம் சம்பந்தமான கையேடுகள் வழங்கப்பட்டன.

# தமிழகத்தில், 16 மாவட்டங்களில், இன்று கன மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டு உள்ளது



சென்னை, செப்,1

சென்னை வானிலை ஆய்வுமையம்வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாநிலத்தில் அதிகபட்சமாக நேற்று, சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மற்றும் கோவை சின்னக்கல்லாறில், 15 செ.மீ., மழைபெய்துள்ளது. திண்டுக்கல், வேடசந்தூர், 11; பஞ்சப்பட்டி, 10; திருத்துறைப்பூண்டி, பெரியகுளம், 8; நாவலூர், பொன்னமராவதி, விருதுநகர், கும்பகோணம், நாமக்கல், 7; முசிறி, திருவிடைமருதூர், நிலக்கோட்டை, 6; பெரியகுளம், விரகனூர், மருங்காபுரி, துவாக்குடி, விருத்தாச்சலம், சமயபுரம், கள்ளந்திரி, 5 செ.மீ., மழை பெய்துள்ளது.

மற்ற பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்துள்ளது. வரும் நாட்களை பொறுத்தவரை, சென்னையில் வானம் மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில், மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

தமிழக பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கன மழைக்கு வாய்ப்புள்ளது. நாளை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கன மழை பெய்யும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை வானிலை ஆய்வுமையம்வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாநிலத்தில் அதிகபட்சமாக நேற்று, சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மற்றும் கோவை சின்னக்கல்லாறில், 15 செ.மீ., மழைபெய்துள்ளது. திண்டுக்கல், வேடசந்தூர், 11; பஞ்சப்பட்டி, 10; திருத்துறைப்பூண்டி, பெரியகுளம், 8; நாவலூர், பொன்னமராவதி, விருதுநகர், கும்பகோணம், நாமக்கல், 7; முசிறி, திருவிடைமருதூர், நிலக்கோட்டை, 6; பெரியகுளம், விரகனூர், மருங்காபுரி, துவாக்குடி, விருத்தாச்சலம், சமயபுரம், கள்ளந்திரி, 5 செ.மீ., மழை பெய்துள்ளது.

மற்ற பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்துள்ளது. வரும் நாட்களை பொறுத்தவரை, சென்னையில் வானம் மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில், மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

தமிழக பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கன மழைக்கு வாய்ப்புள்ளது.

நாளை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கன மழை பெய்யும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாகரல் கிராமத்தில் மின் கம்பத்தில் சிக்கி பசுமாடு பலி: உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நேரில் ஆறுதல்





ஊத்துக்கோட்டை, செப்1-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மாகரல் கிராமம், பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்தவர் ஏழுமலை(வயது45) ஆவார். இவர் தனது பசுமாட்டை நேற்று முன்தினம் மாலை வயல்வெளியில் மேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பலத்த காற்று வீசியது.

இதன் பின்னர், இடியுடன் கூடிய மழை பெய்தது. இப்பகுதியில் பல்வேறு இடங்களில் மின்ஒயர் தாழ்வாக சென்று கொண்டுள்ளது. இந்நிலையில், மின் கம்பத்தில் இருந்த பீங்கான் ஒன்று உடைந்து இரும்பு கம்பத்தில் மின் வயர் உரசி கொண்டிருந்தது. இதனால் அப்பகுதியில் மின்சாரம் பாய்ந்ததாக கூறப்படுகிறது.

அப்போது அந்தப் பகுதியை கடக்க முயன்ற பசுமாடு மின்சாரம் தாக்கி அருகில் இருந்த மற்றொரு மின் கம்பத்தில் சிக்கி துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியானது. இதனைக் கண்ட ஏழுமலை கூக்குரல் இட்டார். அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து மின்சாரத்தை துண்டித்து விட்டு சம்பந்தப்பட்ட மின்வாரியத் துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர். இருப்பினும், மின்வாரிய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லையாம். இந்த சம்பவம் குறித்து வெங்கல் காவல் நிலையத்தில் ஏழுமலை புகார் செய்தார்.

போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். இதேபோன்று கடந்த ஆண்டு இடியுடன் கூடியபலத்த மழை பெய்த போது மின் ஒயர் அருந்து விழுந்து மாடு மேய்த்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் பலியானார். மேலும், இப்பகுதியில் மின் ஒயர் அறுந்து விழுந்ததால் இதுவரையில் 25 ஆடுகள் இரண்டு மாடுகள் இறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், பலியான மாட்டை நேற்று காலை சம்பவ இடத்தில் கால்நடை துறை அதிகாரிகள் பிரேத பரிசோதனை செய்ய வந்தனர் ஆனால் ஏழுமலை மின்வாரிய துறை அதிகாரிகள் வந்து உரிய பதில் அளித்தால் மட்டுமே பிரேத பரிசோதனை செய்ய ஒப்புக் கொள்வேன் என கூறிவிட்டார் தகவல் அறிந்த எல்லாபுரம் 19-வது வார்டு ஒன்றிய குழு உறுப்பினர் கோடுவெளி குழந்தைவேலு, மாகரல் ஊராட்சி மன்ற தலைவர் குமுதா செல்வம், வெங்கடேசன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

பாதிக்கப்பட்ட ஏழுமலைக்கு ஆறுதல் கூறினர் பின்னர் பாண்டேஸ்வரம் துணை மின் நிலைய உதவி பொறியாளர் கோபிநாத்தை தொடர்பு கொண்டு பேசினார் சம்பவ இடத்திற்கு அவர் விரைந்து வந்தார் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆறுதல் கூறி உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார் இதன் பின்னர் கால்நடை மருத்துவர் கார்த்திகேயன் கால்நடை துறை ஆய்வாளர் ஆனந்தி ஆகியோர் பலியான பசுமாட்டை பிரேத பரிசோதனை செய்து அடக்கம் செய்தனர்.

மேலும் இப்பகுதியில் உள்ள தாழ்வான மின் ஒயர்களை சரிசெய்ய வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர் அதனையும் மேல் அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக மின்வாரிய உதவி பொறியாளர் கோபிநாத் உறுதி அளித்தார் இதன் பின்னர் அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர் இப்ப பிரச்சினையால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

### புதுக்கோட்டை சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியில்

# தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பாக கருத்தரங்கம்

புதுக்கோட்டை, செப்.01–



புதுக்கோட்டை மாவட்டம் சத்தியமங்கலம், சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியில் "தொழில்துறை தேவைகளுக்கு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப திறன் மேம்பாடு" என்ற தலைப்பில் மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, நிறைவு நாளான நேற்று சிறப்பு விருந்தினர்களாக ஹெச்டிஎப்சி வங்கியின் மூத்த மேலாளர் கௌதம்குமார் தமது உரையில் வங்கிகளில் எத்தனை வகையான கடன் வசதிகள் உள்ளன, அதனை எவ்வாறு பெறமுடியும், ஏடிஎம் கார்டின் இன்சூரன்ஸ் பற்றியும் மாநில மற்றும் மத்திய அரசின் சலுகைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

அதேபோல் இரண்டாவது அமர்வில் கலந்துகொண்ட நைஸ் தொழிலகத்தின் தலைவர் சரவணன் எஸ்.எஸ்,ஐ மற்றும் எம்எஸ்எம்இ பற்றிய விவரங்களையும் கம்பெனி ஆரம்பிக்கத் தேவையான விவரங்கள், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நிர்வாகத்திறன் பற்றியும், மாணவர்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறு உள்ளன, அதற்கு அவர்கள் எப்படி தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறினார். சுதர்சன் கல்வி நிறுவனங்களின் இயக்குனர் கே.சீனிவாசன் தலைமையுரையாற்றி மாணவ,மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

முன்னதாக பாலிடெக்னிக் துணை முதல்வர் எம்.பாலசுப்பிரமணியன் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார், மேலும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த மாணவ,மாணவிகள் அனைவரும் தங்கள் கருத்துப் படிவத்தினை சமர்ப்பித்தனர். இறுதியாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் விஜயக்குமார் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து நன்றியுரை கூறினர்



தென்காசி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தரவுள்ள கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார்.

### ஆவுடையார்கோவில் தாசில்தாரின் அதிரடி உத்தரவால்

# காவல்துறை உதவியோடு பூவளூர் தலித் மக்களுக்கு குடி தண்ணீர் பைப் பதிக்கும் வேலை தீவிரம்

ஆவுடையார்கோவில், செப்.01–



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா பூவலூர் ஊராட்சியில்கடந்தமாதம் ஆவுடையார்கோவில் சேர்மன் உமாதேவியின் முழு முயற்சியில்சுமார் ரூ.25 லட்சம் ரூபாயில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணிதொடங்கி பூவளூர் ஊராட்சியில் உள்ள மாவடிக்கோட்டை மற்றும் பூவலூர் கிராமங்களுக்கு குடிநீர் பைப்பை 90 சதவீதம் பதிக்கும் வேலை நடந்துள்ள நிலையில் பூவலூரில் உள்ள தலித் மக்களுக்கு சுமார் 800 மீட்டர் நீலத்தில் குடிநீர் பைப் போடுவதில் சிக்கல் ஏற்பட்டு ஒரு சிலர் தடுத்து வந்தனர் இந்நிலையில் கடந்த நான்கு நாட்களாகஒரு தரப்பினர் குடிநீர் வேண்டுமென்று பஸ் மரியல் போராட்டமும், மற்றொரு தரப்பினர் வாய்க்கால் வழியே குடிநீர் பைப் பதிக்க கூடாது என்று சாலை மறியல் போராட்டமும் நடத்தினர்.

இரு தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு இடையில் ஆவுடையார்கோவில் தாசில்தார் மார்டின் லூதர் கிங் அதிரடியாக உத்தரவை பிறப்பித்து அறந்தாங்கி டிஎஸ்பி தலைமையிலான காவல்துறையினர் 50–க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்போடு குடிநீர் பைப்பை பதிக்கும் வேலை ஆவுடையார் கோவில்பிடிஓசீனிவாசன் ஆலோசனையோடு குழாய் பதிக்கும் வேலை ஜேசிபி எந்திரத்தை கொண்டு முடிவு பெற்றுள்ளது, இதனால் சுமார் 20 தலித் குடும்பங்கள்தண்ணீர் கிடைக்கும் மகிழ்ச்சியோடுஉள்ளனர், பூவளூர் தலித் மக்கள் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு தங்களது நன்றியை தெரிவித்துள்ளனர்.

### பல லட்ச ரூபாய் செலவில்

# புதிதாக கட்டப்பட்டு திறக்கப்படாத உரிகம் கால்நடை மருந்தகம்



ஒசூர், செப்.01–

உரிகத்தில் பல லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு, கடந்த 20 ஆண்டாக திறக்கப்படாமல் பாழ்பட்டு முடங்கியுள்ள கால்நடை மருந்தகத்தைச் சீரமைத்து, திறக்க வேண்டும்என கோரிக்கை எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே உரிகத்தைச் சுற்றிலும் 30–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. இப்பகுதிகளில் மக்களின் பிரதானத் தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. இங்கு பெரும்பாலும் வானம் பார்த்த மானாவாரி நிலங்கள் அதிகம் உள்ளதால், இப்பகுதி விவசாயிகள் கால்நடை வளர்ப்பைச் சார்பு தொழிலாகச் செய்து வருகின்றனர்.

குறிப்பாக, நாட்டின மாடுகள், கோழிகள், ஆடுகளை வளர்த்து வருவதோடு,இப்பகுதியில் உள்ள வனங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புகின்றனர். இங்கு ஆண்டு முழுவதும் மாறுபட்ட சீசோஷ்ண நிலை நிலவுவதால், கால்நடைகளுக்கு அடிக்கடி நோய் பாதிப்பு ஏற்படுகிறது. நோய் பாதிக்கும்கால்நடைகளை சிகிச்சைக்காகத் தனி வாகனம் மூலம் அஞ்செட்டி மற்றும் தேன்கனிக்கோட்டைக்கு அழைத்துச் செல்லும் நிலையுள்ளது.

எனவே, உரிகத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் எனத் தொடர்ந்து பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் உரிகத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க பல லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால், இன்று வரை கால்நடை மருந்தகத்தைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால், கால்நடை மருந்தக புதிய கட்டிடம் செடி, கொடிகள் சூழ்ந்து பாழ்பட்டு, திறப்பு விழா காணாமல் முடங்கியுள்ளது. இப்பகுதி மக்கள் வழக்கம் போல கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க 22 கிமீ தூரம் பயணிக்கும் நிலையுள்ளது.

இது தொடர்பாக உரிகம் பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கூறியதாவது: உரிகத்தை சுற்றியுள்ள மலைக் கிராம விவசாயிகள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்ட கால்நடை அரசு மருந்தகம் திறப்பு விழா காணாமல் முடங்கியுள்ளது. என்ன காரணம் என்பதும் தெரியவில்லை. இதனால், பொருளாதார வசதியில்லாதவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு நோய் பாதிப்பு ஏற்படும் போது தங்களுக்குத் தெரிந்த நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கின்றனர்.

இதில், பல கால்நடைகள் உயிரிழக்கும் நிலையுள்ளது. இந்நிலையைப் போக்க கால்நடை மருந்தகத்தைச் சீரமைத்துத் திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தென்காசியில் மின்வாரிய ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

தென்காசி,செப். 01–



தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே மின் வாரிய ஊழியர்கள் பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிஐடியு மத்திய அமைப்பின் மாவட்டத் துணைத் தலைவர் பச்சையப்பன் தலைமை வகித்தார். தென்காசி மாவட்ட சிஐடியு தலைவர் எஸ். அயூப்கான் ஆர்ப்பாட்டத்தைதுவக்கி வைத்து பேசினார், இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்தோனி சேவியர், இளையராஜா, பட்டமுத்து தாணுமூர்த்தி, ராஜசேகரன் வன்னியபெருமாள், கிருஷ்ணன், கணசேகரன், மகாவிஷ்னு, அய்யப்பன், தென்காசி மாவட்ட சி.ஐ.டி.யு செயலாளர் மணிகண்டன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மின் வாரியத்தில் அவுட் சோர்சிங் முறையை கைவிட வேண்டும், மின் வாரியத்தை தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியை கைவிட வேண்டும். காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை காலதாமதம் செய்யாமல் உடனடியாக வழங்கிட வேண்டும், பகுதி நேர ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தை மத்திய அமைப்பு மாவட்ட பொருளாளர் நாகையன் முடித்து வைத்து பேசினார், இதில் மின் வாரிய ஊழியர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், முடிவில் தென்காசி மாவட்ட சிஐடியு தலைவர் எஸ்.அயூப்கான் அனைவருக்கும் நன்றி கூறினார்.



மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை சார்பாக இரண்டாமாண்டு "இளவேனில் 23" அனைத்துத்துறை மாணவர்களுக்கு இடையிலான பல்திறன் போட்டிகள் நடைப்பெற்றது,இவ்விழாவில் 21 துறைச்சார்ந்த 325 மாணவர்கள் கலந்து கொண்டார்கள் , அதிக புள்ளிகளை பெற்று சூழற் கோப்பையை சமூக பணித்துறை மாணவர்கள் வெற்றி பெற்றார்கள், கல்லூரியின் செயலாளர் விஜயராகவன் சூழற்கோப்பையை வழங்கினார், முதல்வர் அ. ராமசுப்பையா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார், இயக்குனர் ச. பிரபு வாழ்த்துரை வழங்கினார், தமிழ்த்துறைத்தலைவர் தி. பரிமளா கருத்துரை வழங்கினார் விழாவின் முன்னதாக மாணவர் செயலர் தாமரை வரவேற்புரையாற்ற, மாணவர் இணை செயலர் காவியா நன்றி கூறினார், விழா ஏற்பாட்டினை தமிழ்த்துறை மாணவர் ஒருங்கிணைப்பு குழுவும், பேரா நா. இரஞ்சித் குமார் ஏற்பாடு செய்திருந்தனர்.

# கச்சத்தீவு மீட்பு விவகாரத்தில் கோர்ட் தலையிட முடியாது உயர் நீதிமன்றம்

மதுரை, செப்.01–



"கச்சத்தீவு மீட்பு விவகாரம் என்பது மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சென்னை மீனவர்கள் நலச்சங்கத்தைச் சேர்ந்த பீட்டர்ராயன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: ''ராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாக கச்சத்தீவு இருந்தது. 1974–ல் இந்தியா மற்றும் இலங்கை இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அடிப்படையில் கச்சத்தீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகின்றனர்.

கடந்த 2013–ல் 111 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் கச்சத்தீவு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கவும், 1974–ம் ஆண்டின் இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சத்தீவை மீட்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு வழக்கறிஞர் வாதிடுகையில்,"இலங்கை ராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்'' என்றார்.பின்னர் தலைமை நீதிபதி அமர்வு,"கச்சத்தீவு மீட்பு விவகாரம் மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது. மனு முடித்து வைக்கப்படுகிறது'' என உத்தரவிட்டது.

# மணமேல்குடி ஒன்றியத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்திற்கான கூட்டம்




மணமேல்குடி, செப்.01–

மணமேல்குடி ஒன்றியத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் தொடர்பான தன்னார்வலர்களுக்கு கூட்டம் நடைபெற்றது.

மணமேல்குடி வட்டார கல்வி அலுவலர் மதிப்புக்குரிய செழியன் தலைமையில் புதிய பாரத திட்டத்திற்கான தன்னார்வலர்களுக்கு கூட்டத்தினை தொடங்கி வைத்தார்.

மணமேல்குடி வட்டார கல்வி அலுவலர் இந்திராணி மற்றும் மணமேல்குடி வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு சிவயோகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தில் இருந்து கற்போர் விவரங்களை சேகரித்து மையங்களை உருவாக்கிட அறிவுறுத்தப்பட்டது.

மணமேல்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட 30 மையங்கள் புதிய பாரத திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு இதுவரை 600 கற்போர்கள் விவரம் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தன்னார்வலர்களுக்கு, கற்போருக்கு வாசிக்க எழுத கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் தன்னுடைய கையெழுத்தை போடுவதற்கும் , தன்னுடைய ஊர் பெயர் ,குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் பெயர்கள், சிறு சிறு வார்த்தைகளை எழுத வைத்தல் போன்றவற்றை பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டது.

இப்ப கூட்டத்தில் 30 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஆசிரியர் பயிற்றுநர்கள் முத்துராமன் வேல்சாமி மற்றும் அங்கையற்கண்ணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் வாக்குச் சாவடிகளை மறுசீரமைப்பு செய்யும் பணியின் ஒருபகுதியாக அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துக்கள் சரிசெய்யப்பட்டு திருத்தப்பட்ட வாக்குச்சாவடிகளின் பட்டியல்களை கலெக்டர் (பொ) மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி வெளியிட்டு ஆலோசனை மேற்கொண்டார். உடன், வருவாய் கோட்டாட்சியர்கள் மகாராஜ் (உதகை), முகமது குதரதுல்லா (கூடலூர்), பூஷணகுமார் (குன்னூர்) உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், காண்டூர் சமமட்டக்கால்வாய் சீரமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், செயற் பொறியாளர் மகேந்திரன், திருப்பூர் மாநகராட்சி 4–ஆம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# டிஎன்பிஎஸ்சி தலைவர் பதவிக்கு சைலேந்திரபாபு ஆளுநருக்கு அரசு மீண்டும் பரிந்துரை






# கச்சத்தீவு மீட்பு விவகாரத்தில் தலையிட முடியாது உயர் நீதிமன்றம் கருத்து

# ரசாயனம் கலக்காத விநாயகர் சிலைகளை மட்டுமே விற்க, கரைக்க வேண்டும்



| சென்னை / புதுக்கோட்டை | 01.09.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

01.09.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா , இந்திய ஆன்மிகவாதி (பி.1896) (இ.1977)



ஜி. நாகராஜன் , தமிழக எழுத்தாளர் (பி.1929) (இ.1981)



பத்மநாதன் இராமநாதன் ,இலங்கைத் தமிழ் வழக்கறிஞர், நீதிபதி, அரசியல்வாதி (பி.1932) (இ.2006)



அய்க்கண் , தமிழக எழுத்தாளர், தமிழ் பேராசிரியர் (பி.1935) (இ.2020)



## இன்றைய நினைவு நாள்

செ. கதிர்காமநாதன் , ஈழத்து எழுத்தாளர் (பி.1942) (இ.1972)



சேவியர் தனிநாயகம் , இலங்கைத் தமிழறிஞர் (பி.1913) (இ.1980)



பாலா தம்பு , இலங்கை இடதுசாரித் தொழிற்சங்கவாதி (பி.1922) (இ.2014)

